# IN THE COURT OF I ADDITIONAL DISTRICT JUDGE, CUDDALORE.

## O.S.No. 102 Of 2016

| | | |
|---|---|---|
| **Witness Rank** | **:** | DW1 |
| **Name of the Witness** | **:** | காமராஜன் |
| **Father's Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Occupation** | **:** | |
| **Address** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 10th day of November, 2025.

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை :-

அண்ணாமலைபடையாட்சி எழுதியதாக சொல்லும் அசல் உயில் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னிடம் அசல் உயில் இல்லை. அண்ணாமலைபடையாட்சிக்கு சர்வே எண்.38 ல் 4 ஏக்கர் பாகமாக வந்ததா என்று எனக்கு தெரியாது. அதே சர்வே எண்.38 ல் ஆதிலட்சுமிக்கு 6 ஏக்கர் பாகம் வந்ததா என்றால் எனக்கு தெரியாது. அசல் உயில் நான் பார்த்தது இல்லையா என்றால் பார்த்தது கிடையாது. அந்த உயிலில் சர்வே எண் .38 தவிர வேறு சொத்து விவரங்கள் இல்லை என்றால் சரியல்ல. வீடு உள்ளது. சர்வே எண் எனக்கு தெரியாது. மனை உள்ளது சர்வே எண் எனக்கு தெரியாது. அந்த சொத்துக்களை விற்று விட்டார்கள். வழக்கில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்களில் சர்வே எண் .38 மட்டும் தான் உயிலில்

உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களில் சி அட்டவணை சொத்தில் உள்ள சர்வே எண்.38 தவிர மற்ற சொத்துக்களை எனக்கு பிரிப்பதில் ஆட்சேபனை இல்லையா என்றால் நகைகள் மற்றும் பணம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. Savings deposit ல் நான் தான் நாமினி. என்னுடைய பாட்டியிடம் எவ்வளவு நகை இருந்த விவரம் எனக்கு தெரியாது. உயிலில் சாட்சி யார் என்றால் A.K. ராஜேந்திரன் மற்றும் ராமச்சந்திரன் ஆகியோர் ஆகும். ராமச்சந்திரன் தற்போது உயிருடன் இல்லை. ராமச்சந்திரன் மற்றும் ராஜேந்திரன் எனக்கு என்ன உறவு என்றால் உறவு எதுவும் இல்லை. என் தாத்தாவுடன் பழகியவர்கள். உயிலை அனுசரித்து நானும் எனது சித்தப்பாவும் பட்டா மாற்றிக்கொண்டோமா என்றால் மாற்றிக்கொண்டோம். உயில் படி தான் பட்டா மாற்றப்பட்டதாக எனது பதிலுரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. பட்டா மாற்ற உத்தரவு என் பெயரில் உள்ளதா என்றால் இருக்கிறது. என் தாத்தா உயில் எழுதியதாக நான் பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. என் பாட்டியின் சொத்திற்கு என் தாத்தா உயில் எழுத அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண் .38 ல் மொத்தம் 12 ஏக்கர் என்றால் 22 ஏக்கர் ஆகும். சர்வே எண்.38 முழுவதும் என் அனுபவத்திலும், என் சித்தப்பா அனுபவத்திலும் உள்ளது என்றால் தவறு. பெண்களுக்கும் ஒரு ஒரு ஏக்கர் என் தாத்தா உயில் எழுதி வைத்துள்ளார். அது அவர்கள் அனுபவித்து வருகிறார்கள். வாதிகள் சர்வே எண்.38 ல் உள்ள நிலங்களை அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல.

என் அத்தைகளுக்கு சொத்து கொடுக்க கூடாது என்ற எண்ணத்தில் தவறான கட்சி ஆடுகிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*

*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*